# 26-09-2023 செய்தி

## பூமிக்கு வந்த பென்னு சிறுகோளின் கல், மண் மாதிரிகள்

**நாசா சாதனை**

- ஒசைரிஸ் – ரெக்ஸ் விண்கலம்

**மாதிரிகள் சேகரிப்பு**

- 'பென்னு' சிறுகோள் – பூமியிலிருந்து 200 கோடி கி.மீ தொலைவில் உள்ளது.
- கல், மண் மாதிரியை சேகரித்து வெற்றி
    * நாசா – ஒசைரிஸ் – ரெக்ஸ் விண்கலம்

**சூரிய குடும்பத்தில் உள்ள சிறுகோள்கள்**

**கோள்கள்**

* புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் உள்ளிட்டவை

**சிறுகோள்கள்**

* சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றி வரும்
* இது வரை ஆய்வு படி 1.31 லட்சம் சிறுகோள்
* 1 மீ – 1000மீ வரை – விட்டம்

**பென்னு சிறுகோள்**

- சிறுகோள்கள் பூமியின் மீது மோதக்கூடிய ஆபத்து
    * விஞ்ஞானிகள் எச்சரிக்கை
- 'பென்னு' – 300 ஆண்டுகளில் பூமியின் மீது மோதலாம்.

**தோற்றம்**

- 450 கோடி ஆண்டுகளுக்கு முன்
- பூமி தோன்றுவதற்கு முன்

**பென்னு சிறுகோளை ஆய்வு செய்வதன் அவசியம்**

- சூரிய குடும்பத்தின் தோற்றம்
- கோள்களின் தோற்றம்
- உயிரினங்கள் மற்றும் தண்ணீரில் தோற்றம்

**ஒசைரிஸ் – ரெக்ஸ் விண்கலம்**

- 2016, செப்டம்பர் 8 பென்னுவை நோக்கி அனுப்பப்பட்டது.
- 2018, டிசம்பர் 3 பென்னு சிறுகோளை அடைந்தது.
- 2020, அக்டோபர் 20 அன்று மாதிரியை சேகரித்தது.
    - கல், மண்
- பூமியை நோக்கிய பயணம் 2021, மே 10ல் தொடங்கியது.
    * கொள்கலன் – 44.500 கி.மீ வேகம்
    * பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்த 13வது நிமிடத்தில் அமெரிக்காவின் உட்டா மாகாண பாலைவனத்தில் விழுந்தது.

**முக்கியக்குறிப்பு**

- 1999 – 'லைனியர்' ஆய்வு மூலம் கண்டறியப்பட்டது.
- விஞ்ஞானிகள் சூட்டிய பெயர் – '1999 ஆர்க்யூ36'
- 9 வயது மாணவர் – 'பென்னு'

## நிறைவேறியது மகளிர் மசோதா

**33% இடஒதுக்கீடு**

- நாரி சக்தி வந்தன் அதினியம்
- ஐந்தாவது முயற்சியில் வெற்றி

**முயற்சிகள்**

- 1996 – தேவ கௌடா அரசு
    * மக்களவையில் அறிமுகம்
    * 11வது மக்களவை கலைக்கப்பட்டது. மசோதா காலாவதியானது.
    * 81வது திருத்த மசோதா
- 1998 டிசம்பர் 14 – வாஜ்பாய் அரசு
    * மக்களவை அறிமுகம்
    * 12வது மக்களவை கலைப்பு, மசோதா காலாவதியானது.
    - 84வது திருத்த மசோதா
- 1999 டிசம்பர் 23 – வாஜ்பாய் அரசு
    * மக்களவையில் அறிமுகம்
    * ஒரு மித்த கருத்து இல்லாததால் மசோதா தொடரப்படுவதில்லை.
    * 85 வது திருத்த மசோதா
- 2008 – மன்மோகன் சிங் அரசு
    * மாநிலங்களவையில் அறிமுகம்
    * 2010 ல் நிறைவேற்றம்
    * 108வது திருத்த மசோதா
- மக்களவையில் நிறைவேற்றப்படாத நிலையில் மக்களவை கலைப்பு – மசோதா காலாவதியானது

**தரவு**

- தற்போதைய மக்களவை உறுப்பினர்
    - மொத்தம் 542 பேர்
    - பெண் உறுப்பினர் 81 பேர் (14.39%)
    - தேசிய அளவில் சட்டமன்ற பெண் உறுப்பினர்களின் சராசரி 9%

SURESH'

## சிப் உற்பத்தி

**இந்தியாவில் சிப் தொழிற்சாலை**

- புதிய தொழில்நுட்பத்தில் வளர்ச்சி – செயற்கை நுண்ணறிவு, 5ஜி மற்றும் இணைய பொருள்கள்
- இந்தியா – வலிமையான அறிவுசார் மையம் மற்றும் அதிகரிக்கும் தேவை
- இந்தியா – உலகளவில் குறைக்கடத்தி வடிவமைக்கும் 20% பொறியாளர்கள் உள்ளனர்.

**அரசாங்கத்தின் முன்னெடுப்பு**

- 2021 வடிவமைப்பு இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டம்
  * உள்நாட்டு வடிவமைப்பு நிறுவனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.
  * நோக்கம் – புதுமையை உள்நாட்டு மையமாக்க வேண்டும்
  * ரூ1500 கோடிக்கு மேல் லாபம் ஈட்டக்கூடிய 20 நிறுவனங்களை உருவாக்க வேண்டும்.
- உள்நாட்டு சிப் உற்பத்தி நிறுவனங்கள் சம பங்குடன் செயல்படுதல்
- நிலையான நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் நிலையான சுற்றுச்சூழல் அமைப்பை உறுதி செய்தல்.
- குறைக்கடத்தி தொழிற்சாலையானது – மூலதன செறிவுமிக்கது.
- நீண்டகால மூலோபாய கொள்கை அவசியமானது.
- அரசாங்கத்தின் முயற்சி – பயனற்ற மற்றும் திறனற்றவை
- சமபங்கை உட்செலுத்தல் – உள்ளூர், சிறிய, நடுத்தர நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

**சவால்கள்**

- துணிகர முதலீட்டாளர்கள் குறைவு
- குறைந்த ஆண்டு வருமானம்
- வடிவமைப்பிற்கு அதிக செலவு
- குறைந்த வருட வருவாய்
- சிப் தொழிற்சாலைக்கு அதிகளவிலான உற்பத்தி காலம்

## இந்தியா பிரேசில் தென் ஆப்பிரிக்கா கூட்டமைப்பு

**ஐபிஎஸ்ஏ மன்றம்**

- மூன்று நாடுகள் மன்றம் – 3 வெவ்வேறான கண்டங்களிலிருந்து 3 பெரிய ஜனநாயக மற்றும் 3 முக்கிய பொருளாதார நாடுகளின் கூட்டமைப்பு
- பேச்சுவார்த்தை முறை – தொடர்பை எளிதாக்குவது.
  * விளைவு – தெற்கு – தெற்கு கூட்டமைப்பு

**நோக்கம்**

- 3 நாடுகளுக்கிடையே வர்த்தக வாய்ப்பினை அதிகரித்தல்
- தகவல், தொழில்நுட்பம் மற்றும் திறன் பரிமாற்றம்

**உருவாக்கம்**

- 6 ஜுன், 2003 – பிரேசில் உள்ள பிரேசிலீயாவில் நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டம்
- இந்த மன்றமானது, நிரந்தர செயலகத்தை கொண்டிருக்கவில்லை.

**ஐபிஎஸ்ஏ யின் கூட்டுறவு**

- **மன்றம்** – உலகளாவிய மற்றும் பிராந்திய அளவில் உள்ள அரசியல் பிரச்சினைகளை ஆலோசித்தல் மற்றும் இணைந்து செயல்படுதல்.
- நிலையான பகுதியில் செயல்பாட்டு குழு மூலம் கூட்டுறவை ஏற்படுத்துதல் மற்றும் மக்களுடன் மக்கள் இணைந்து செயலாற்றல்.
- இம்மன்றத்தின் நிதியானது, வளரும் நாடுகளின் திட்டங்களுக்கு உதவியாக உள்ளது.

**இம்மன்றத்தின் கூறுகள்**

- ஐபிஎஸ்ஏ நம்பகநிதி
- 2004ல் உருவாக்கம்.
  * இந்தியா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா இணைந்து
- 2006ல் செயலாக்கம்

  நோக்கம் – வளரும் நாடுகளில் வறுமை மற்றும் பசியை போக்குதல்
  * **எப்படி?** – தெற்கு, தெற்கு கூட்டமைப்பின் மேம்பாட்டு திட்டங்களுக்கு அதரவு அளித்தல்
- 44 மில்லியன் அமெரிக்க டாலர் ஒதுக்கீடு. 34 உறுப்பு நாடுகளின் 39 மேம்பாட்டு திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

**ஐபிஎஸ்ஏ – எம்ஏஆர்**

- பல்நாட்டு கடற்படை பயிற்சி
- **நோக்கம்** – கடற்படை பாதுகாப்பில் வலுவான கூட்டமைப்பை உருவாக்குதல்
- 7வது பதிப்பு – தென் ஆப்பிரிக்காவின் எலிசபெத் துறைமுகம் – அக்டோபர் 10-12, 2022

**ஐபிஎஸ்ஏ கூட்டுறவு திட்டம்**

- **நோக்கம்** – பொருளாதார மற்றும் சமூக அறிவியல் தளங்களில் இளம் ஆய்வாளர்களை பரிமாறிக் கொள்வதை ஊக்குவித்தல்
  * விளைவு – ஐபிஎஸ்ஏ இடையே ஆராய்ச்சி கூட்டுறவை தென்-தளத்தில் வலுப்படுத்தல்

SURESH'